<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 495/2021</u>
<u>வழக்கு சாட்சி PW–15</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆதிலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பால்ச்சாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 02.03.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 02.09.2018 ம் தேதி, நான் கடையம் வட்ட காவல்ஆய்வாளராக பணியில் இருந்தபோது, காவல்நிலைய குற்ற எண்.260/2018 வழக்கை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 12.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் தர்மலிங்கம் மற்றும் சுடலைமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர், சாட்சிகள் தர்மலிங்கம் மற்றும் சுடலைமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் சேர்மன், கந்தசாமி, ஆனந்த், அரிராஜ், பொன்ராஜ், சுப்பிரமணியன், மங்கலம், ஜெயலட்சுமி, இசக்கிராமகிருஷ்ணன், கொடிரோஜா, தலைமைக்காவலர் முகமதுரபி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 03.09.2018ம் தேதி வழக்கின் சம்பவம் உண்மையென புலனானதால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 10.00 மணியளவில் வழக்கின் 1ம்எதிரி கௌலிகுமார் என்ற முத்துக்குட்டியை ராம்நகர் பேருந்து நிலையம் அருகே வைத்து கைது செய்து, சாட்சிகள் பச்சம்மாள் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி கௌலிகுமார் என்ற முத்துக்குட்டி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய TN-76D-2748 Hero Honda Splendor பைக்கையும், இப்போது உங்களிடம் ஆஜர் செய்வேன். இசக்கிராமகிருஷ்ணனின் கையை துண்டாக வெட்டப் பயன்படுத்திய அரிவாளை என் வீட்டு கட்டிலுக்கு அடியில் சாக்கு போட்டு மறைத்து வைத்துள்ளேன். என்னுடன் வந்தால் அதையும் எடுத்து ஆஜர்படுத்துவேன் என்று கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8** ஆகும். அதே இடத்தில் வைத்து மேற்குறிப்பிட்ட பைக்கை 12.00 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆகும்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியையும், சாட்சிகளையும் உடன் அழைத்துக்கொண்டு அன்றைய தினம் 12.45 மணியளவில் எதிரி கௌலிக்குமாரின் குத்தபஞ்சான் ஊரிலுள்ள வீட்டில் சென்று அவர் கட்டிலுக்கு அடியில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 44.5 செமீ நீளமுள்ள கொடுக்கு அரிவாள் ஒன்றினை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகும். பின்பு எதிரி மற்றும் சொத்துக்கள் சகிதம் காவல்நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட

சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.அந்த படிவம் 91 அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 ஆகும். அந்த TN–76D–2748 Hero Honda Splendor பைக் – அ.சா.பொ.2 ஆகும்.

பின்பு 22.10.2018ம் தேதி, வழக்கின் 2வது எதிரி செல்லக்குட்டி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை நம்பர்.16192/2018ன் உத்தரவுப்படி முன் ஜாமீன் பெற்று விட்டார்.

பின்பு 11.12.2018ம் காயம்பட்ட இசக்கிராமன்கிருஷ்ணன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்.கோகிலாலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு 14.12.2018ம் தேதி, காயம்பட்ட இசக்கிராமன்கிருஷ்ணன் என்பவருக்கு மேல்சிகிச்சை அளித்த மருத்துவர்.ரமேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் மீது உள்ள குற்றம் புலனானதினால் சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 307, 506(2) விலிருந்து சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 307, 506(2) உ/இ 34 இதச ஆக மாற்றம் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டமாறுதல்அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். பின்னர் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் 02.09.2018ம் தேதி காலை 11.30மணிக்கு முதல் தகவல் அறிக்கை நகலை பெற்றேன். முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவர் அவர்கள் 03.09.2018ம் தேதி இரவு 9.45 மணிக்கு பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிரி கெவுலிகுமார் 03.09.2018ம் தேதி இரவு 9.45 மணிக்கு

தான் ரிமண்ட்க்காக ஆஜர்படுத்தப்பட்டார் என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரம், தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், 03.09.2018 ம் தேதி மதியத்திற்கு மேல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலகுத்தப்பாஞ்சான், கீழகுத்தப்பாஞ்சான் என்ற இரண்டு ஊர்கள் உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.5 ல் சம்பவ இடமான கீழக்குத்தப்பாஞ்சான் பிள்ளையார் கோவில் தெரு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதியறிக்கையில் சாட்சி–1, சாட்சி–2 ஆகியோர்கள் கீழகுத்தப்பாஞ்சான் ஊரில் பால் வியாபாரம் செய்து வருகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையில் அசா.1 இசக்கி ராமகிருஷ்ணன் தாக்குதலில் காயம்பட்டு இடது கை துண்டிக்கப்பட்டு அவர் உயிருக்கு பயந்து அவரது தெருவுக்குள் தப்பி ஓடி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் ஓடினார் என்று புலன் விசாரணையில் தெரியவந்ததா என்றால் அரை கிலோ மீட்டர் ஓடியதாக தெரியவந்தது. துண்டிக்கப்பட்ட கையிலிருந்து இரத்தம் ஓடிய இடத்தில் பட்டது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவம் இடத்தில் இரத்தம் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மறுநாள் அந்த இடத்தில் இரத்தக்கரை எதுவும் ஆட்கள் நடமாட்டம் இருந்ததனால் தென்படவில்லை. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராமசாமி, பாப்பா, மாரியப்பன், மணிமுத்து, செல்வம், முத்தம்மாள், சுடலை முத்து ஆகியோர்களை நான் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்று

கூறினார்கள். சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னதால் அவர்களின் வாக்குமூலத்தை நான் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

அ.சா.1க்கு காயம் ஏற்பட்டது கீழகுத்தபாஞ்சான் கிராமம் என்றாலும், நான் வரைபடம் வரைந்தது மேலகுத்தபாஞ்சான் கிராமம் என்றாலும் சரியல்ல. முதல்தகவல்அறிக்கையில் தவறுதலாக கீழகுத்தபாஞ்சான் கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், சம்பவம் மேல குத்தபாஞ்சான் கிராமம் பிள்ளையார் கோவில் அருகே நடந்ததாக தெரிய வந்தது. மேலகுத்தபாஞ்சான்கிராமத்தில் நான் வரைபடம் வரைந்த இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதினால் தான் இரத்தக்கறை இல்லை என்றால் சரியல்ல.

அ.சா.1 என்னுடைய விசாரணையில் கௌலிக்குமார் 2 முறை அ.சா.1ஐ வெட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் 1ம் எதிரி ஓட்டி வந்ததாக கூறப்பட்ட பைக்கின் பதிவெண் எந்த கம்பெனியை சார்ந்தது என்று அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் சம்பவசமயத்தில் ஓட்டி வந்த பிளாட்டினா பைக்கை நான் பார்வையிட்டேன், கைப்பற்றவில்லை. சம்பவ சமயத்தில் அந்த பைக்கை யார் ஓட்டி வந்தார்கள் என்று என்னுடைய விசாரணைக்கோப்பில் துலங்கியதா? என்றால் சாட்சி சேர்மன் ஓட்டி வந்தார். அவர் பால்வியாபாரம் செய்ய பயன்படுத்தும் இருசக்கரவாகனம் என்றால் சரிதான். அவருடைய வண்டியின் இருக்கைக்கு பின்னால் இரும்பு கேரியர் அமைத்து அதில் 40 லிட்டர் பால் கேனை வைத்து கொண்டு செல்வார் என்றால் பின் இருக்கைக்கு பின்னால் அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

சம்பவ சமயத்தில் அ.சா.1 கேரியருக்கு முன்னால் அ.சா.2 க்கு பின்னால் இருந்தார் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் பால் சிந்தி கிடந்ததா? என்றால் இல்லை. அ.சா.4 ஜெயலட்சுமி என்பவர் என்னுடைய விசாரணையில் எதிரிகள் 2 பேரும் உன் புருஷனை துண்டு, துண்டாக வெட்டப்போகிறோம் என்று அவரிடம் சொன்னதாக என்னிடம் கூறவில்லை. எதிரிகள் இருவரும் அரிவாள் வைத்திருந்ததாகவும், 2 எதிரிகளும் அ.சா.4 ன் தம்பியின் கையை வெட்டியதாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா? என்றால் கௌலிக்குமார் வெட்டியதாக சொல்லியுள்ளார். 2 பேரும் அரிவாள் வைத்திருந்ததாக சொல்லவில்லை.

ஆம்புலன்ஸை யார் வரவழைத்தார்கள் என்றால் சாட்சி அரிராஜ் என்பவர் வரவழைத்து மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றுள்ளார். ஆம்புலன்ஸ் டிரைவரை நான் விசாரிக்கவில்லை. டாக்டர். திரவியம் என்பவரை நான் இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான், சிகிச்சை அளித்த டாக்டர்.ரமேஷ் என்பவரை விசாரித்துள்ளேன். திரவியம் மருத்துவமனை சிகிச்சை குறிப்புகளில் காயம்பட்டவரை அருணாச்சலம் என்பவர் கொண்டு சென்று சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரிராஜ் என்பவரைத் தான் அருணாச்சலம் என்று எழுதப்பட்டுள்ளது. அரிராஜ் என்பவர் என்னுடைய விசாரணையில் அவருடைய பெயர் அருணாச்சலம் என மருத்துவ பதிவேடுகளில் எழுதியதாக கூறவில்லை.

1வது எதிரியின் சொந்த ஊர் நெட்டூர் என்றால் சரிதான். அவர் 2ம் எதிரியின் சகோதரியை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு நெட்டூரில் பல கொலை வழக்குகள் இருந்ததினால் அவருக்கு பாதுகாப்பு இல்லாததினால் மேலகுத்தபாஞ்சான் ஊரில் குடியிருந்து வந்தார்

என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 மற்றும் அவர்களுடைய ஊர் நாட்டாண்மைகள் 1ம் எதிரி மேலகுத்தபாஞ்சான் ஊரில் குடியிருக்கக்கூடாது என சொல்லி வந்தார்கள் என்றால் சரியல்ல.

2ம் எதிரி, 1ம் எதிரிக்கு இந்த ஊர் பாதுகாப்பு என சொன்னார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அவருடைய விரோதிகளால் கொலை செய்யப்பட்டார் என்றால் நான் கேள்விபட்டேன். சம்பவ சமயத்தில் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் ஒரே பைக்கில் சென்றதாக கூறுவதும், சம்பவத்தை அ.சா.2 பார்த்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து அ.சா.1க்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1க்கு கீழகுத்தபாஞ்சான் கிராமத்தில் ஒரு பெண்ணிடம் இருந்த தவறான தொடர்பு காரணமாக வேறு நபரால் அந்த ஊர் பிள்ளையார் கோவில் முன்பு வைத்து காயப்படுத்தப்பட்டார் என்றால் சரியல்ல. காயம்பட்ட அ.சா.1ஐ அந்த ஊர்க்காரர்கள் 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல.

ஆம்புலன்ஸ் டிரைவர் தான் துண்டிக்கப்பட்ட கையை எடுத்துச் சென்றார் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு காரணமானவர்களை கைது செய்தால் சாதி பிரச்சனை ஏற்படும் என்பதினால், அ.சா.2 மற்றும் அவர்கள் ஊர் நாட்டாண்மைகள் அறிவுறுத்தலின் பேரில் எதிரிகள் மீது பின்யோசனையின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் இருக்கக்கூடிய கைரேகை அ.சா.1ன் கைரேகை இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவயிடத்திற்கு சென்று பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை

என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல், ஒருதலைபட்சமாக விசாரித்து பிழையான இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.03 15:22:36 +0530